10.02.2026

O.S.No. 196/2024

PW2– பரமசிவன் – த/பெ. சின்னதம்பி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனது மகன் வாதி 8ம் வகுப்பு வரை படித்துள்ளார், அவருக்கு எழுதப்படிக்க தெரியும். பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. நான் தான் வாதிக்கு பத்திரம் மூலமாக சொத்தை பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துடன் பிற சொத்துக்களையும் வாதிக்கு நான் பத்திரம் மூலம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பிற சொத்துக்களும் வீட்டுமனைகள் தான். பிற சொத்துக்களுக்கு முன் ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். பிராதுதபசில் சொத்துக்கு முன்ஆவணம் கிடையாது என்றால் சரிதான்.

3. பிராது தபசில் சொத்தை நான் அனுபவம் செய்தவற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். ஆணையர் ஸ்தல பார்வை செய்யும்போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் உள்ள விவரத்தை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். நானும், எனது மகனும் வழக்கை நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல, எனது மகன் தான் நடத்திவருகிறார்.

4. வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞரிடம் விவரம் நான் சொல்லவில்லை, எனது மகன் மட்டும்தான் சொல்வார். என் மகன் இந்த வழக்கில் சாட்சி சொன்ன விவரம் எனக்கு தெரியும். பிராது தபசில் சொத்தை எனது மகன் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். பிராதுதபசில் சொத்தில் தற்போது கட்டிடம் உள்ளதா என்றால் இல்லை, முன்பு ஆஸ்பெஸ்டாஸ் போட்ட தொழுவம் இருந்தது. அது மழையில் இடிந்துவிட்டது.

5. 1ம் பிரதிவாதி உள்ளூரில் இருந்துவருகிறார், 2ம் பிரதிவாதி திருநெல்வேலியில் வசித்துவருகிறார். நான் பிராது தபசில்சொத்தை 40ஆண்டுகளாக அனுபவம் செய்துவருகிறேன். பிராது தபசில் சொத்து ஆதியில் பிரதிவாதிகளின் முன்னோர் கரடி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிரதிவாதிகளின் கிரையப்பத்திரத்தை நான் படித்துப்பார்க்கவில்லை அது அனைத்தும் பொய்.

6. பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் சொத்து உள்ளது என்றாலும், எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காகதான் தாவாசொத்தில் கட்டிடம் உள்ளதாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான், எனது மகனுக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக எனதுபெயரில் பட்டா இல்லை என்றாலும், பத்திரம் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

7. 2ம் பிரதிவாதி என் மீதும், என் மகன் மீதும் வழக்கிற்கு முன்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். எனது மகனை வைத்து மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது மகனுக்கு தாவாசொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கு அருகாமையில் உள்ள சொத்துக்களை கரடி என்பவர் பிற நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு கரடியின் மகன் கருப்பசாமியையும் எனக்கு தெரியாது.

8. எனக்கு 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் தெரியாது. 1ம் பிரதிவாதியின் கணவர், முருகையா உள்ளிட்ட நபர்களுக்கு தாவா சொத்து மற்றும் பிற சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவரின் முகவர் பிற நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளர் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்றநோக்கோடு பிரதிவாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/−K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி